# அகநானூற்றில் கரடிகள்

**முனைவர் மு. முரளி**
**உதவிப்பேராசிரியர் (தமிழ்), கிரசண்ட் நிகர் நிலைப் பல்கலைக்கழகம்**
**வண்டலூர்.**

**ஆய்வுச்சுருக்கம்**

சங்கத் தமிழர்கள் இயற்கையோடியைந்த வாழ்வினை மேற்கொண்டவர்கள். அவர்தம் வாழ்வில் பல்வேறு நுட்பங்கள் இருந்துள்ளது. விலங்கு, பறவை, மரம், பூ, காய், பழம் என எண்ணற்றச் செய்திகளை நன்கு அறிந்தவர்கள் சங்கத்தமிழர்கள் என்பதனை சங்க இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. அச்சங்க இலக்கியத்தில் ஒன்றான அகநானூற்றில் கரடி குறித்து இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

**முன்னுரை**

இருபதாம் நூற்றாண்டில் தொலைக்காட்சியில் பல்வேறு உயிரினங்களை மக்கள் காண்கிறார்கள். குறிப்பாக விலங்குகளது அன்றாட வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவதில் வெளிநாட்டு அலைவரிசைகள் முக்கிய இடம்பெறுகின்றன. இதில் நாம் கவனிக்க வேண்டியது சங்கப் புலவர்கள் தொழில்நுட்ப வளர்ச்சியில்லாத காலத்திலேயே விலங்குகளது நடத்தைகளைப் பதிவு செய்திருப்பது தமிழிலக்கியம் உலக இலக்கியங்களில் உயர்ந்திருப்பதை நன்கு அறியமுடியும்.

ஒருபானைச் சோற்றிற்கு ஒரு சோற்றினைப் பதம் பார்ப்பது போல் அகநானூற்றில் குறிக்கப்பட்டுள்ள கரடிகள் குறித்து ஆராய்வதன் வழி சங்கப்புலவர்களின் ஆளுமையை உலகிற்கு எடுத்தியம்பலாம். இக்கட்டுரையில் கரடி குறித்து வரும் பிற பெயர்களாவன பெருங்கை ஏற்றை, எண்கு, உளியம் என்பனவாகும். கரடியினுடைய உணவுமுறைப் பழக்கம், கரடியின் நடை கரடியின் காலில் உள்ள அதிக மயிர், கரடி தன் குட்டிக்குப் பால் கொடுத்தல், கரடி இரவு வேளையில் உணவு தேடி அலைதல், கரடியைக்கண்டு சங்க மக்கள் அஞ்சியது, கரடியைக்கண்டு பாம்பு அஞ்சியது, கரடியை வில் அம்பு கொண்டு சங்க மக்கள் தாக்கத் தயார் நிலையில் இருந்தது எனக் கரடி குறித்து இக்கட்டுரையில் உரிய சான்றுகளோடு விளக்கப்பட்டுள்ளது. கரடி உணவுக்காக கறையான் புற்றில் கைவிட்டுள்ளது. அப்புற்றிலுள்ள பாம்பு அஞ்சி நடுங்கியுள்ளதை

“ஈயல் புற்றத்து ஈர்ம் புறத்து இறுத்த
குரும்பி வல்சிப் பெருங்கை ஏற்றை
தூங்கு தோல் துதிய வள் உகிர் கதுவலின்
பாம்பு மதன் அழியும் பானாட் கங்குலம்” (அகநா. 8: 1-4)

எனும் அடியில் சுட்டப்பட்டுள்ளது.

கரடி கறையான் புற்றை இரவு வேளையில் ஆராய்தல்

இரவு வேளையில் இருளை கிழிக்குமளவு மின்னல் மின்னியுள்ளது. அவ்விடத்தில் மின்மினிப் பூச்சிகள் பலவாறு மொய்த்துள்ளது. அங்கு கரடி தனக்கான உணவிற்காக கறையான் புற்றில் கைவிட்டு ஆராய்ந்துள்ளது. இக்காட்சி கொல்லன் இரும்பினைக் காய்ச்சி அடிக்கும் போது தீப்பொறிகள் சிதறுவது போல மின்மினிப் பூச்சிகள் பறந்துள்ளது. இதில் கரடி கொல்லனோடு உவமிக்கப்பட்டுள்ளது. இதனை



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

“குரும்பி கொண்டும் பெருங்கை ஏற்றை
இரும்பு செய் கொல் எனத் தோன்றும் ஆங்கண்” (அகநா. 72: 4-5)
எனும் அடியில் சுட்டப்பட்டுள்ளது.

கரடியினுடைய வாய் கொல்லனுடைய துருத்தியோடு உவமிக்கப்பட்டுள்ளது. இருப்பைப் பழத்தினை உண்டுவிட்டு கறையான் புற்றில் தன்னுடைய மூக்கால் காற்றை உள்ளிழுத்து வெளியிடும் கரடியுனுடைய முகமானது, கொல்லன் கையிலிருக்கும் துருத்தியெனும் கருவியோடு உவமிக்கப்பட்டுள்ளதை
“ஓங்கு சினை இருப்பைத் தீம்பழம் முனையின்
புல் அளைப்புற்றின் பல் கிளைச் சிதலை” (அகநா. 81: 2-3)
எனும் பாடல் வழி அறியலாம். கரடி தன்னுடைய உணவிற்காக கறையான் புற்றில் கைவிட்டுள்ளது. அதனுடைய வளைந்த கூரிய நகம் பட்டு பாம்பு இறந்துள்ளது. இதனை
“காம்பு அமல் இறும்பில்பாம்பு படத் துவன்றி
கொடுவிரல் உளியம் கெண்டும்” (அகநா. 88: 13-14)
எனக் குறிக்கப்பட்டுள்ளது.

உடன்போக்கிற்கு தாய் ஒப்புதல் அளித்தல் - வழியிடையில் கரடிக்கூட்டம்

காதலனுடன் உடன்போக்கு போக தாய் ஒப்புதல் அளித்துள்ளதை தோழியிடம் தலைவி கூறுகிறாள். இதில் அவ்வழியிடையில் இருப்பைப் பழம் (இலுப்பை) கொட்டிக்கிடக்கின்றன. அதனையுண்ண கரடிக்கூட்டம் படையெடுக்கும் செய்தியினை
“பொகுட்டு அரை இருப்பைக் குவிகுலைக் கழன்ற
ஆலி ஒப்பின் தூம்புடைத் திரள் வீ
ஆறு செல் வம்பலர் நீள் இடை அழுங்க
ஈனல் எண்கின் இருங்கிளை கவரும்” (அகநா. 95: 6-9)
எனக் குறிக்கப்பட்டுள்ளது.

கரடியின் நடை:-

கரடியின் நடை குறுநடை எனக் குறிக்கப்பட்டுள்ளது. இதனை
‘கூனல் எண்கின் குறுநடைத் தொழுதி’ (அகநா. 112: 1)
எனக் குறிக்கப்பட்டுள்ளது.

கரடியின் விருப்ப உணவான இருப்பைப் பூ(இலுப்பை) மற்றும் கறையான் குறிக்கப்பட்டுள்ளது.

□சேரர்களுடைய பேரியாற்றின் வழியே யவனர்களுடைய அழகுவாய்ந்த மரக்கலங்கள் வந்துள்ளது. அவ்விடத்தில் முசிறி துறைமுகம் இருந்துள்ளது. பாண்டிய அரசன் செழியன் அவ்விடத்தை வென்று முசிறி துறைமுகத்தையும் தன்னுடைய ஆளுகைக்குக் கொண்டு வந்துள்ளான். பேரியாற்றில் வரும் யவனர் கலத்தில் பொன் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. அங்கிருந்து மீளும் கலத்தில் கறி (மிளகு) ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. அகநானூற்றுப் பாடல் எண் 149-இல் இத்தகைய வரலாற்றுச் செய்திகளைக் காணமுடிகிறது. இதனை
“நெடுஞ்செம் புற்றத்து ஒடுங்கிரை முனையில்
புல்லரை இருப்பைத் தொள்ளை வான்பூப்
பெருங்கை எண்கின் இருங்கிளை கவரும்” (அகநா. 149: 2-4)

எனக் குறிக்கப்பட்டுள்ளது.

வில் அம்பு கொண்டு கரடியினைத் தாக்க தயார் நிலையில் இருத்தல்

□மலையடிவாரத்தில் தங்கியிருக்கும் கானவர் மக்களுக்கு எந்நேரத்திலும் கரடி இல்லத்திற்கு அருகாமையில் வருமென்பதை நன்கு அறிந்திருந்தனர். கரடியின் ஒலி கேட்டு கானவர்கள் தீட்டிய அம்போடு வில்லை எடுத்துக்கொண்டுச் சென்றுள்ளார்கள். கரடியோ பழத்தைப் போல் தீஞ்சுவையையுடைய இருப்பைப் பூவினை (இலுப்பை) மரத்திலேறி உண்டுள்ளது. இதனை

"பழம் போற் சேற்ற தீம் புழல்
கருங் கோட்டு இருப்பை ஊரும்
பெருங் கை எண்கின் சுரன் இறந்தோரே" (அகநா. 171: 13-15)

எனக் குறிக்கப்பட்டுள்ளது.

இருப்பைப் பூவை உண்டு விட்டு கறையான் புற்றை நோக்கி நகர்தல்

□இருப்பைப் (இலுப்பை) பூவிலுள்ள இனிப்புச் சுவை அதிகரித்ததும் அதனை சமன் செய்யும் நோக்கில் கரடிகள் கறையான்களை உண்டிருக்குமோ என ஐயம் எழுகிறது. பாடல் எண் 149-இல் கறையான்களை உண்டு விட்டு இருப்பைப் பூவினை நோக்கி கரடிகள் நகர்ந்துள்ளது. ஆக இவ்விரு உணவினையும் கரடி மாறி மாறி உண்டுள்ளது. இருப்பைப் பூவினை உண்டு விட்டு கறையான் புற்றை நோக்கி கரடிகள் சென்றுள்ளதை

"இருங்கிளை எண்கின் அழல்வாய் ஏற்றை
கருங் கோட்டு இருப்பை வெண்பூ முனையின்
பெருஞ் செம் புற்றின் இருந்தலை இடக்கும்" (அகநா. 247: 4-6)

எனும் அடிகளில் சுட்டப்பட்டுள்ளது. கரடிகளது

உணவுப் பழக்கத்தில் இருப்பையும் (இலுப்பை), கறையானும் மிகப்பெரிய இடத்தைப் பெறுகிறது என்பதனை அகநானூற்றுப் பாடல்கள் வழி அறியமுடிகிறது.

ஈன்ற கரடி கறையானை இரவில் உண்ணுதல்

□குட்டிப் போட்டக் கரடி நள்ளிரவில் கறையான் புற்றில் கைவிட்டு கறையான்களைத் தின்றுள்ளது. விலங்கினங்களின் ஈனுதலுக்குப் பிறகு அதிக பசியெடுக்கும் என்பது யாவறும் அறிந்த ஒன்று. அவ்வகையில் கரடியினது பசியை கறையான்கள் போக்கியுள்ளதை

"அரில் இவர் புற்றத்து அல்கு இரை நசை,
வெள் அரா மிளிர வாங்கும்
பிள்ளை எண்கின் மலைவயினானே" (அகநா. 257: 18-20)

எனும் அடிகளில் சுட்டப்பட்டுள்ளது.

காலில் மயிர் நிரம்பப் பெற்ற கரடிகள்

பொருள் தேடிச்சென்ற தலைவன் வருகையை சுவரில் கோடு போட்டு தலைவி எண்ணிக் கொண்டிருக்கிறாள். தலைவன் சென்ற வழியோ காலில் மயிர் நிரம்பப் பெற்ற கரடிகள் இருப்பைப் பூவினை உண்ணும் நிலமென்பதனை

"கொள்ளை வான் பூ

மயிர்க் கால் எண்கின் ஈர் இனம் கவர
மை பட்டன்ன மா முக முசுவினம்" (அகநா. 267: 8-10)
எனும் அடிகளில் சுட்டப்பட்டுள்ளது.

உடன்போக்கும் - வழியிடையில் கரடியும்

உடன்போக்கில் சென்றது ஒரு வருத்தமென்றால். வழியிடையில் கரடிகள் இருக்குமென்பது தாயின் மற்றொரு கவலையாக இருந்துள்ளது. இதில் அச்சம் தரக்கூடிய கரடிகள் துளையுடைய இருப்பைப் பூவினை உண்ணும் சூழலை:

"திரள் அரை இருப்பைத்தொள்ளை வான் பூக்
குரளைஎண்கின் இருங்கிளை கவரும்" (அகநா. 275: 11-12)
எனும் அடிகளில் சுட்டப்பட்டுள்ளது.

பாலை – வழியிடை அச்சம் கரடி உலவுதல்

தோழி தலைவனிடம் பொருள் தேடிச் செல்ல வேண்டாம் எனப் பல காரணம் மொழிகிறாள். அதிலொன்று புற்றைத் தோண்டி உணவுத் தேடும் கரடிகள் உலவுமென்பதை:

பெருங்கை எண்கினம் குரும்பி தேரும்
புற்றுடைச் சுவர புதல் இவர் பொதியில் (அகநா. 307: 10-11)
எனும் அடிகளில் சுட்டப்பட்டுள்ளது. இதில் கரடியினது பெரியக் கை தனித்து குறிக்கப்பட்டுள்ளது.

இருப்பையை கரடிக் கூட்டம் ஆடு மேய்வது போல் மேய்ந்துள்ளது. உயர்ந்த அடிமரம் கொண்ட இருப்பையை கரடிக் கூட்டம் ஆடு மேய்வது போல் மேய்ந்துள்ளது. மீதமிருந்த பூக்களை தழையாடை உடுத்திய பழையர் இன மக்கள் மூங்கில் குழாய்களில் அடைத்திருந்ததை:

"ஆடு பரந்தன்ன ஈனல் எண்கின்
தோடு சினை உரீ: உண்ட மிச்சில்
பைங் குழைத் தழையர் பழையர் மகளிர்" (அகநா. 331: 3-5)
எனும் அடிகளில் சுட்டப்பட்டுள்ளது.

அகநானூற்றில் பதினாறு பாடல்களில் கரடித் தொடர்பான குறிப்புகள் கிடைக்கின்றது. இதில் கரடியானது தமிழர்களது வாழ்வில் வழியிடை அச்சமாக இருந்துள்ளது. அதனை வில் அம்பு கொண்டு எதிர்க்கவும் தமிழர்கள் தயாரானதை அறியமுடிகிறது. மேலும் கரடியினது அன்றாட வாழ்க்கையினை நுட்பமாக கி.மு. காலத்திலேயே பதிவு செய்திருப்பது நம் தமிழ்ப் புலவர்களின் உயிரியல் அறிவு நமக்கு வெளிப்படையாகத் தெரிகிறது. இருப்பைப் பூ(இலுப்பை), கறையான் கரடியின் விருப்ப உணவாக இருந்துள்ளதையும் அறியமுடிகிறது. சங்க மக்கள் தங்களது தேவைக்காக இருப்பைப் பூவினை(இலுப்பை) மூங்கில்; குழாய்களில் சேகரித்ததும் குறிக்கப்பட்டுள்ளது.

☐கரடியின் வாய் கொல்லனுடைய துருத்தி(கருவி) என உவமிக்கப்பட்டுள்ளது. கரடியின் நடை குறுநடை என அழகுற கூறப்பட்டுள்ளது. கி.மு.வில் கரடியோடு கொண்ட அச்சமும் அழகியலும் தற்போது வரைத் தொடர்கிறது. பலருடைய படுக்கையறையிலும் கரடி பொம்மையினை வைத்துள்ளார்கள். இது சங்கப்புலவர்கள் கரடியை அழகியலோடு உவமித்த காட்சிகளை நினைவு படுத்துவதாக உள்ளது.

☐உலக அளவில் கரடி இரசுயாவின் தேசிய விலங்காக உள்ளது. கரடிக் குறித்த ஆய்வுகள் உலக அளவில் நடந்து கொண்டிருக்கிறது. நம் சங்கப் புலவர்கள் கி.மு. காலத்திலேயே கரடியினுடைய அன்றாட

வாழ்க்கையை பதிவு செய்திருப்பது அவர்தம் நுட்ப அறிவை உலகம் வியக்கும் அளவிற்கு உள்ளது. மேலும் பண்டைத் தமிழருக்கும் கரடிக்கும் இருந்த இயற்கைச் செய்திகளை குறித்திருப்பது நம் மொழி வளமைக்கு கிடைத்த நற்பேறு என்பதை உலகறியும் விதமாய் உள்ளது.

**துணை நின்ற நூல்கள்**

1. சங்க இலக்கியம் - எட்டுத்தொகை நர்மதா வெளியீடு
2. பக்தவத்சலபாரதி – பண்பாட்டு மானிடவியல்: மெய்யப்பன் பதிப்பகம்.

**துணை நின்ற இணைப்புகள்**

1. தமிழ் இணையக் கல்விக்கழகம்
2. தமிழ்த் துளி
3. தமிழ்ச் சுரங்கம்

சுருக்கக் குறியீடு - 1. அகநா. – அகநானூறு